‘ வேதாரண்யம்’ பெயர் மாற்றம்

* 183 வினு—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் (வேதாரண்யம் வட்டம்) ‘வேதாரண்யம்’ என்ற பெயரை திருமறைக்காடு என்று மாற்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

துணை வட்டங்களை வட்டமாக உயர்த்தல்

* 184 வினு—திரு. எம். முத்தையா : உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துணை வட்டங்களை தரம் உயர்த்தி தனி வட்டம் ஆக்குவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் ?

(இ) ஒட்டப்பிடாரம் துணைவட்டத்தை தரம் உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஒரு துணை வட்டத்தை தனி வட்டமாக தரம் உயர்த்தும்போது, பொதுவாக அத்துணை வட்டத்தின் பரப்பளவு, மக்கள் தொகை, இட அமைப்பு பணம் செலுத்தவும் இதர நிருவாக சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் பொதுமக்கள் வட்டத் தலை நகருக்குச் செல்ல வேண்டிய தூரமும் அதனால் மக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் ஆகியவற்றைப் பொதுவாகக் கருத்திற்கொண்டு ஒரு முடிவெடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

* 185 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி துணை வட்டத்தை தனி வட்டமாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

Salt areas in Tuticorin

" 186 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works, be pleased to state.—

(a) whether the Central Government has undertaken to hand over the salt areas in Tuticorin to the State Government; and

(b) if so, details thereof ?

THE HON. THIRU S. MADHAVAN : Yes. Precise details regarding the extent of land, the compensation amount to be paid to the Government of India for the above lands, etc., are yet to be received from the Government of India.